பதிவு எண். : 44/2016

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

ஏர் 10 • உழவு 2 • திருவள்ளுவர் ஆண்டு 2056 • விலை ரூ.20/- • பிப்ரவரி 2025 (தை - மாசி)

பதிப்பாளர் : கொங்கு நண்பர்கள் சங்கம். வெள்ளி விழா இல்லம்,
எண் : 34, சீனிவாசப் பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை– 600 014. செல் : 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com, இணையதளம் : www.kongunanbargalsangam.com

நிர்வாகக்குழ உறுப்பினர்கள் :

தலைவர்
**V.K.செல்வக்குமார்**
MD - Chennai Mettex Lab Pvt. Ltd.,

செயலாளர்
**M.அமராபதி**
Managing Partner - Jairram Hi-Tech Products

பொருளாளர்
**C.கொங்குவேள்**
MD - Dharani Developers P.Ltd., (PGP Group)

துணைத் தலைவர்கள் :

திரு. **R.சண்முகவேல்**
MD - Sunbright Designers Pvt. Ltd.,

திரு. **V.P.வீரப்பன்**
MD - Sengam Transport

இணைச் செயலாளர்கள் :

திரு. **C.அரவிந்தன்**
MD - K Labs Technology & Solutions Pvt. Ltd.,

திரு. **P.ரவி**
Chairman - SKV Educational Institution's

செயற்குழு உறுப்பினர்கள் :

திரு. **அருள்பொன்னுசாமி**
Director - Ponmani Engineers Pvt. Ltd.,

திரு. **V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant

திரு. **S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)

திரு. **K.ஜெகதீசன்**
Chairman - Unitech Gorup

திரு. **S.சீனிவாசன்**
MD - Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,

திரு. **N.P.இசையழகன்**
Proprietor - M/s. Esai & Co., Chartered Accountants

திரு. **R.கந்தகார்த்திக்**
Proprietor - RKG & Sons Associates

திரு. **கதிர்வேல் கணபதியப்பன்**
Chairman - ISSM Business School

திரு. **K.G.ஜோதீஷ்குமார்**
JMD - Athiappa Chemicals (P). Ltd.,

திரு. **A.நடராஜன்**
Proprietor - NU-Tech Components

திரு. **S.ஜெகன்நாதன்**
President - Sri Krishna Power Loom Society

திரு. **K.நித்தியானந்தன்**
MD - Sri Devkrish Group

திரு. **விசா M.சண்முகம்**
Managing Partner - Sri Ambika Nets

திரு. **S.குணசேகரன்**
Managing Director - BRT Spinner Pvt. Ltd.,

திரு. **T.P.நடராஜன்**
Managing Partner - V.M.D. Groups, Chithode

திரு. **சிவப்பிரகாசம் மாணிக்கவாசகம்**
Director - RAWS N-Greens Health Care (P). Ltd.,

**திருமதி பரமேஸ்வரி சின்னசாமி**
Director - P & C Projects (P) Ltd.,

**டாக்டர் சண்முகப்பிரியா** MBBS.,
AGS Complex & Ware Houses

தணிக்கையாளர் : திரு. **R.பாலசந்திரன்** CA

**Published & Edited by :**
K.K.Ramesh on behalf of Kongu Nanbargal Sangam,
Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street,
Royapettah, Chennai - 600 014.

**Printed by** :
M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.

## ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# சென்னை மெட்டெக்ஸ் லேப் பிரைவேட் லிமிடெட்

# CHENNAI METTEX LAB PRIVATE LIMITED®

Mettex Since 1984

*Where Test Inspires Trust*

## Accreditations | Approvals : ISO 17025 : 2017 NABL TC - 5589

TC - 5589

( Tea Board of India )

MoEF ( Ministry of Environment, Forest and Climate change )

APEDA ( The Agricultural and Processed Food Products Export Development Authority )

EIC ( Export Inspection Councilof India )

IOPEPC ( Indian Oil seeds and Produce Export Promotion Council )

GAFTA ( Grain and Feed Trade Association )

BIS ( Bureau of Indian Standards )

FSSAI ( Food Safety and Standards Authority of India )

## OUR SERVICES

| CHEMICAL | MECHANICAL | BIOLOGICAL | ENVIRONMENTAL | FOOD | WATER |
| --- | --- | --- | --- | --- | --- |
| Metals & Non Metals, Spectro & Wet Analysis, Salt Spray Test, ROHS, Polymer Identification etc., | Tensile, Yield Strength, Elongation, Hardness, Micro/Macro Structure, Vickers Hardness Impact Test, Rubber Test etc., | Food & Agricultural products, Water & PDW, Marine / Aquaculture Products, Animal Food & Feed, Nutritional Supplements, IAQ & Swabs etc., | AAQ Monitoring, IAQ/Fugitive Monitoring, Stack Emission, Noise Level , Effluent & Sewage Water Analysis etc., | Nutrition Label, Shelf Life, Cooked Food, Fruits, Agri, Dairy, Animal Products, Flavours, Pesticides, Meat, Fish & Egg Products etc., | Drinking & Packaged Drinking Water, Raw water, Well & Bore well Water, RO & DM Water, Industrial Water, Waste Water, ETP & STP Water etc., |

- மஞ்சள் கிழங்கில் குர்க்குமின், நிலக்கடலை, வெங்காயம், கறிவேப்பிலை, முருங்கைக்கீரை போன்ற வேளாண் விளை பொருட்களையும் மற்றும் மீன், இறால் இறைச்சி போன்ற உணவுப் பொருட்களையும் ஏற்றுமதி செய்வோருக்குத் தேவையான ஆய்வுகள் செய்து சான்றிதழ் வழங்க APEDA, EIC, FSSAI, AGMARK போன்ற அரசு அமைப்புகளின் அனுமதியும் இங்கிலாந்து (UK) நாட்டின் GAFTA அமைப்பின் அத்தாட்சியும் பெற்ற ஆய்வு நிறுவனம்.
- குடிநீர் ஆய்வு IS:10500, IS:4251, IS : 14543 பரிசோதனை செய்து தரப்படும்.
- ஆட்டோமொபைல், இன்ஜினியரிங் தொழிலுக்கு தேவையான உலோக, அலோகப் பகுப்பாய்வுகள் இயந்திரவியல் சோதனைகள் செய்து சான்றளிப்பதில் 39 ஆண்டுகளாக முத்திரை பதித்த NABL அங்கீகாரம்பெற்ற நிறுவனம்.



ENVIRONMENTAL TESTING



BIOLOGICAL TESTING



MECHANICAL TESTING



CHEMICAL TESTING



SAMPLE COLLECTION CENTERS

SCAN FOR OUR NABL SCOPE

SCAN HERE TO CONTACT US

**பதிவு அலுவலகம் அலகு - 1 :**
83, ஜோதி வளாகம், எம்.கே.என்.சாலை,
கிண்டி, சென்னை - 600 032.
Ph: +91 44 2232 3163, 4217 9490
Mob : 98410 78949, 98411 37087

**மாதிரி சேகரிக்கும் மையம்:**
குன்னூர் - +91 89398 72544, 89399 98324
தூத்துக்குடி - +919941131882
நாமக்கல் - +91 8939856450
நெல்லூர் - +91 9000614411
விசாகப்பட்டிணம் - +91 9030906630
காக்கிநாடா - +91 8978086356

**அலுவலகம் அலகு - 2 :**
101, பாரதியார் சாலை, திரு.வி.க.தொழிற்பேட்டை,
ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 097.

**கிளை அலுவலகம் :**
மும்பை - +91 89398 72540
பாண்டிச்சேரி - +91 95512 50027
பெங்களூரு - +91 89399 90282
கோயம்புத்தூர் - +91 98410 53041

**கிளை அலுவலகம் & ஆய்வகம் :**
ஈரோடு - 0424 - 2272282 +91 9952949222, 89398 72544
பீமாவரம் (ஆந்திரா) - 08816-246784

ஆயுஷ் அமைச்சகம் மற்றும் தமிழ் நாடு அரசு அங்கீகாரம் பெற்ற மருந்து பரிசோதனைக் கூடம்

www.mettexlab.com test@mettexlab.com

# தலைவர் மடல்



அன்புடையீர், வணக்கம்

நலம், நலம் பல விழைகிறேன்

கொங்கு சொந்தங்கள் அனைவரும் தைப்பொங்கல் திருநாளை மிக்க எழுச்சியோடு கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

கடந்த இதழில், பொங்கல் வாழ்த்து அனுப்பும் வழக்கத்தை முதன் முதலில் ஏற்படுத்தியவர் திரு.ம.ப.பெரியசாமி தூரன் என்பதைக் குறிப்பிட்டு அவரைப் பற்றிய சில செய்திகளைப் பகிர்ந்து கொண்டேன். அப்பெருமகனின் நினைவு தினமும் ஜனவரி 20 என்பதால் அவரை நினைவு கூர்ந்து எழுதிய கட்டுரையாகவும் அது அமைந்துவிட்டது.

பதிப்புப் பணியின் முன்னோடிகளில் ஒருவரான உ.வே.சாமிநாதய்யரைத் கொண்டாடும் தமிழறிஞர்களின் கண்களுக்கு நம் கொங்கு நாட்டு பதிப்புச் செம்மல் தமிழறிஞர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் தட்டுபடவேயில்லை. ஓலைச்சுவடியாகக் கிடைத்த கொங்குவேளிரின் “பெருங்கதை” காப்பியத்தை உ.வே.சா.அவர்களுக்குக் கொடுத்து உதவியர் நம் பெருமகனார் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள். மறந்துபோன அவர்தம் வரலாறை நாம் மறக்காமல் இவ்விதழிலே வெளியிட்டுள்ளோம்.

தை 05, காலிங்கராயன் தினமாக காலிங்கராயன் கால்வாய் ஓடும் பகுதிகளில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கி.பி.1282 ஆம் ஆண்டில் தை 05 ஆம் நாள் காலிங்கராயன் தான் வெட்டிய வாய்க்காலை நாட்டுக்கு அர்ப்பணித்தார். எனவே, அப்பெருமகனை நினைகூரும் விதமாக அன்று முளைப்பாரி எடுத்து வாய்க்காலில் கரைக்கும் நிகழ்வு, அப்பாசனவசதி பெறும் வேளாண் பெருமக்கள் நன்றியோடு கொண்டாடும் விழாவாகும். அதுகுறித்த படக்காட்சிகள் இந்த இதழை அலங்கரிப்பதோடு, காலிங்கராயன் கால்வாய் கரையில் அமைந்துள்ள அதனால் வளமடைந்த ஊர்களின் பெயர்கள் இவ்விதழிலே செய்தியாக இடம்பெற்றுள்ளது.

சென்னை, முகப்பேர் கொங்கு சொந்தங்கள் ஆண்டுதோறும் பெரியபாளையம் சென்று, அருள்மிகு பவானி அம்மனுக்குப் பொங்கலிட்டு, கிடாவெட்டி படையல் அளித்துக்கொண்டாடி வருகிறார்கள். அவ்விழாவின் நிகழ்ச்சிகளையும், விருந்தோம்பல் காட்சிகளையும் இம்மலரிலே பதிப்பித்துள்ளோம்.

மேலும், சனவரி 26 அன்று குடியரசு தினம் சங்க அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. அதே நாளில், போரூர் கொங்கு நலச்சங்கம் தனது குடும்பவிழாவை, சவீதா பல்கலை வேந்தர் திருமிகு. வீரைய்யன் அவர்களின் தோட்டத்திலே வெகு சிறப்பாக நடத்தியது, போரூர் கொங்கு சொந்தங்களும் வருடந்தோறும் கிடா வெட்டி விருந்து படைத்து, குடும்பத்தோடு கொண்டாடி மகிழ்கின்றனர். உறவுகள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு நட்புறவை வலுப்படுத்திக் கொள்ள இவ்விழாக்கள் அமைகின்றன என்றால் அது மிகையில்லை.

**கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையின் பீடுடையது இல்** (குறள் 1021)

ஒருவன், என் குடியை உயர்த்தும்
தொழிலைச் செய்யப் பின் வாங்கமாட்டேன்’
என்னும் பெருமையைவிட மேலானது வேறு
இல்லை என்பது இதன் பொருள்.
அப்படித்தம் குடி உயரப் பாடுபடும்
அனைத்து சொந்தங்களுக்கும் எனது
நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

அன்புடன்

**வீ.க.செல்வக்குமார்**

தலைவர்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

■

INNOVATION IN GREEN LIVING

Authorised Distributor

Alpine

EUROPEAN STANDARD
uPVC PROFILES / WINDOWS & DOORS

# ALPINE uPVC SOLUTIONS

**PROFILES, WINDOWS & DOORS**

# JAIRAM HI-TECH PRODUCTS

**Chennai Office** : N.P.17/1, Industrial Estate, Ekkaduthangal, Chennai - 600 032.
Mobile : 9750903479. Email : chennai@alpineupvc.com

**Warehouse :** 75/1A1, Bye Pass Road, Senneerkuppam,
(Opp. Saveetha Dental College) Chennai - 600 056.

**Branches** : Coimbatore | Tiruppur | Trichy | Madurai

www.alpineupvc.com

# செயலாளர் கடிதம்



கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்

உங்கள் அனைவரையும் இம்மடல் வாயிலாக சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். தைத் திங்கள் 5–ம் தேதி காலிங்கராயன் தினம் நமது கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக அனுசரிக்கப்பட்டது. வங்கத்தில் ஒடி வரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்'' என்று நதி நீர் இணைப்பை தீர்க்க தரிசனமாய் பாடியவர் மகாகவி பாரதி. இவருக்குப் பல நூற்றாண்டுகள் முன்பேயே தம் மதிநுட்பத்தால் இன்றைக்கும் பிரமிப்பை ஏற்படுத்தும் வண்ணம் காலிங்கராயன் வாய்க்காலை சாத்தியமாக்கிவர் நமது காலிங்கராயன்! அன்றைய காலகட்டத்திலேயே முற்போக்கு சிந்தனைகளின் மொத்த உறைவிடமாகத் திகழ்ந்தார். அடித்தட்டு மக்களிடம் வரி வசூலிக்கக் கூடாது என்பது அவர் பின்பற்றிய கொள்கைகளில் ஒன்று.

தனது சவரத் தொழிலாளியின் விருப்பத்திற்கிணங்க "நாவிதன் பாளையம்'' என ஊர்ப்பெயரை மாற்றியமைத்த பெருமையும் அவருக்குண்டு. இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் இக்கால்வாயின் மூலம் தன் குடும்பம் மற்றும் குலத்தை சார்ந்த தவர்கள் எவ்வித சலுகையும் பெறக்கூடாது என ஊரை விட்டு வெளியேறிய உயர்ந்த பண்பாளர்.

இவை போன்ற நம் கொங்கு சான்றோரின் அரிய சாதனைகளை இக்கால சந்ததியினரும் அறியும் வண்ணம் முன்னெடுப்பதே இன்றைய மிகப் பெரிய தேவையாகும். நமது நாட்டின் 76 ஆவது குடியரசு தின விழா சங்கத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் 2024–2026 ஆம் ஆண்டிற்கான சங்கத்தின் 4வது செயற்குழு கூட்டமும் நடைபெற்றது. நமது சங்கத்தின் ஆடவர் விடுதி, மகளிர் விடுதி, மற்றும் தீரன் சின்னமலை மாளிகையின் சேவைகளை நமது சொந்தங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்!

நன்றி, வணக்கம்.

**எம்.அமராபதி**
செயலாளர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

■



# கொங்கு நண்பர்கள் சங்கம்

(பதிவு எண் : 282/76)






**FACILITIES**

| | |
|---|---|
| AC Rooms | TV - CCTV - Wifi |
| Double Cot | Safety Secure |
| Water Bottle | Bathroom Heater |
| Towel | Drinking Water Dispenser |

**Discount for Members**

"தீரன் சின்னமலை மாளிகை"
நெ.72, பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

chennaikongu@gmail.com
044 - 4266 8046
Cell : 93815 45451






## கொங்கு மகளிர் விடுதி

**FACILITIES**

| | |
|---|---|
| Sharing Room | Safety Secure |
| Double Cot | Bathroom Heater |
| CCTV - Wifi | Drinking Water Dispenser |

**Two Wheeler Parking Available**

chennaikongu@gmail.com
044 - 4266 8046 | Cell : 63839 85919

"கொங்கு நாடு இல்லம்" 27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014

## கொங்கு மாணவர் விடுதி

**FACILITIES**

| | |
|---|---|
| Double Cot | Safety Secure |
| CCTV | Bathroom Heater |
| Wifi | Drinking Water Dispenser |

**Two Wheeler Parking Available**

chennaikongu@gmail.com
044 - 4351 0460 | Cell : 63839 85919

"வெள்ளி விழா இல்லம்" 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.

www.kongunanbargalsangam.com

With best Compliments from

**R.SHANMUGAVELU**

+91 98410 22960

rsvelu@sunbrightindustries.com

**SUNBRIGHT EMBROIDERS**

( Embroidery )

**SUNBRIGHT DESIGNERS PVT. LTD.**

( Hometex & Apparel )

**SUNBRIGHT INDUSTRIES PRIVATE LIMITED.**

( Agro Infra & Agri Exim )

**Head Office:**

Module No. 4-8, Readymade Garment Complex,
Industrial Estate, Guindy, Chennai- 600 032.

Tel: +91-44-22500988, Fax: +91-44-22501317
e-mail: sun@sunbrightdesigners.com
Website: www.sunbrightdesigners.com


ISSM
BUSINESS
SCHOOL
ADMISSION OPEN
MBA 2025
GET YOUR DREAM PLACEMENTS FROM
6 LAKHS TO 20 LAKHS
DAIMLER
ZOHO
amazon
tcs
TATA CONSULTANCY SERVICES
EY
pwc
APPLY NOW
97899 31111
KATHIRVEL GANAPATHIAPPAN
CHAIRMAN & CO-FOUNDER
DR. PARKAVI MAHALINGHAM
FOUNDER & MANAGING DIRECTOR

# பொங்கல் விழா



தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை, தமிழ் பண்பாட்டின் சிறப்பினை உலகுக்கு உணர்த்தும் திருவிழாவாகும். தமிழர், வேளாண்மை வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு, பயிர்த் தொழிலுக்கு உறுதுணையான சூரியனுக்கும், ஆநிரைகளுக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்தும் வகையில் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. இக்கட்டுரையில் அந்த நான்கு நாள்களின் முக்கியத்துவத்தை காணலாம்.



## தைப்பொங்கல்

பொங்கல் பண்டிகையின் இரண்டாவது நாளான தைப்பொங்கல் மிக முக்கியமான நாளாகக் கொண்டாடப்படுகிறது. இது தை மாதத்தின் முதல் நாளாகும்.









## போகிப் பண்டிகை

பொங்கல் பண்டிகையின் முதல் நாள் போகி ஆகும். "போகி" என்பது "போக்கி" என பொருள்படும், பழையன கழிந்து புதியன புகுதல் என்ற கருத்தை கொண்டது.

உழவர்கள் அந்த ஆண்டில் பயன்படுத்திய முறம், கூடை போன்ற பழைய பொருட்களை எரித்து, அதன் சாம்பலை மண்ணில் தூவுவது வழக்கமாக இருந்தது. இதன் மூலம், பழையதை நீக்கி புதியதை வரவேற்கும் ஒரு வேளாண் சுழற்சி நிகழ்வாக இது அமையும். இது மார்கழி மாதத்தின் கடைசி நாளாகும்.

தற்போதைய காலக்கட்டத்தில், வீடுகளில் உள்ள பழைய பொருட்களை மாற்றும் ஒரு நாளாக போகி பண்டிகை கடைப்பிடிக்கப்படுகிறது.

# மாட்டுப்பொங்கல்

வேளாண்மைக்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் நாளாக மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இது பொங்கல் பண்டிகையின் மூன்றாவது நாளாகும்.

கொங்கு பகுதிகளில், குறிப்பாக காங்கேயம் பகுதியில், மாட்டுப் பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பழைய கோட்டை பட்டக்காரர் உருவாக்கிய காங்கேயம் மாடினம் இவ்வினக் காளைகள் கம்பீரத்திற்குப் பெயர் பெற்றவை.

இந்த காளைகளை இப்போது குட்டப்பாளையம் சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மையம் இனவிருத்தி செய்து பாதுகாத்து வருகிறது. இந்த மையம் ஆயிரக்கணக்கான ஏக்கர் மேய்ச்சல் நிலமான கோரங்காட்டை பாதுகாத்து, காங்கேயம் மாடுகளின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்கிறது.

சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மையம் ஆண்டு தோறும் கால்நடை கண்காட்சிகளை நடத்தி, இளைய தலைமுறைக்கு ஆநிரைகளின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.









**மாட்டுப் பொங்கல் அன்று**

மாடுகளின் கட்டுத்தரை மற்றும் தொழுவம் சுத்தம் செய்யப்படும். மாடுகளுக்கு குளியல் செய்யப்படும். கொம்பு சீவுதல், காவி பூசுதல் போன்ற அழகு அலங்காரங்கள் செய்யப்படும். உழவுக்கருவிகளை ஒழுங்காக வைத்து, படையல் வைத்து, பொங்கல் வைத்து வழிபாடு நடத்தப்படும்.

**காணும் பொங்கல்**

பொங்கல் பண்டிகையின் நான்காவது நாளாக காணும் பொங்கல் (கன்னிப்பொங்கல்) கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் உற்றார், உறவினரை சந்தித்தல், விளையாட்டுகள் மற்றும் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

**பொங்கல் வாழ்த்துக்கள்**

பொங்கல் தினத்தில் வாழ்த்து அட்டைகள் பரிமாறும் பழக்கத்தை தமிழறிஞர் பெரியசாமி தூரன் அறிமுகப்படுத்தினார்.

இப்போது அச்சுப் பதிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகளுக்கு பதிலாக குறுஞ்செய்திகள், மின்னஞ்சல், சமூக வலைதளங்கள் போன்ற நவீன முறை அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

**முடிவுரை**

இவ்வாறு, பொங்கல் பண்டிகை ஒவ்வொரு ஆண்டும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகை தமிழர்களின் நன்றி மறவாமை பண்பினை உலகிற்கு பறைசாற்றும் திருவிழாவாகும்.

www.kangayambull.com | www.karthikeyasivasenapathy.in

With Best Compliments From

## A.NATARAJAN

# M/s. Nu-Tech Components

Mfrs of CNC Machined Precision components



## OUR STRENGTH

- ACHIEVING ZERO PPM AT CUSTOMER END
- EQUIPED FOR HIGH VOLUME AND LOW COST PRODUCTION
- WE HAVE INDUCTION HARDENING AND GRINDING FACILITY IN OUR GROUP CONCERN
- HIGHLY EXPERIENCED & COMMITED TOP MANAGEMENT (ALL DEPARTMENT HEADS HAVE SERVED MORE THAN 5 YEARS)
- READY TO INVEST AS PER CUSTOMER REQUIREMENT

## List of Major Customers

- DELPHI - TVS Technologies Limited – Mannur & Oragadam (Manufacturers of Diesel Fuel Injection Systems)
- STANADYNE INDIA PVT LTD (Manufacturers of Diesel Fuel Injection Systems).
- ABI-SHOWATECH INDIA pvt Ltd. (A Unit of TURBO ENERGY Ltd, Mfrs of Turbo Chargers)

**133/(SP), First Main Road,**
**Ambattur Industrial Estate,**
**Chennai-600058**

# நாடுவோமா

நித்திரை தழுவிட
கனவுகள் மலரும்,
விழிகள் திறந்திட
காட்சிகள் விரியும்.

சுற்றங்கள் சூழ்ந்திட
பந்தங்கள் தொடரும்.
கவர்ந்தவள் நாடிட
காதல் பூ மலரும்.

சேமிப்பு இயல்பாக
கையிருப்பு கூடும்.
சிக்கனம் கைவர
கவலைகள் விலகும்.

நல்லெண்ணம் உனதாக
மகிழ்ச்சி பூ மலரும்.
பக்தி வழி நீ நடக்க
நிம்மதி நிலவும்.

மிகுமுயற்சி இயல்பாக
வெற்றிகள் குவியும்.
ஆசான் அமைந்திட
நூலறிவு பெருகும்.

உடல்நலம் பேணிட
சுறுசுறுப்பு மலரும்.
நிறையுழைப்பு நல்கிட
உயர்வுகள் குவியும்.

தவிர்க்க சோம்பலை
கூட்டுக நட்பினை
முயற்சிகள் கூடிட
உயர்வுனை நாடும்

**"வாழி நலம் சூழ!"**
**- கலாப்ரியன் (பூபதி)**

பசுமை நிறை வயல்
பரப்பும்
வளர்ந்துயர்ந்த
பனைகளும்
மின் கடத்தும்
வட தடமும்
தோப்பாய்த்
தென்னைகளும்
குறு மரங்கள் தமை
தாங்கும்குன்றின்
தொடர்களும்
இளநீல துரிசற்ற விண் பரப்பும்
சிறு துணுக்காய்
பிஞ்சு மஞ்சும் திகழ
இவ்வொளிப் படத்தில்
மானிடரும்
உயிரினமும்
காணவில்லை
ஆயினும்
உயிரோட்டம்
இருக்கிறதே ! இதுவே
வையத்தின்
வரைமுறையோ

**"வாழி நலம் சூழ!"**
**- கலாப்ரியன் (பூபதி)**

K Labs®
Knowledge Empowers
An ISO 9001:2008 Certified Company

We Development Services | Software Development
Digital Marketing | Graphics Design | BPO Services

www.klabsindia.com



# இயற்கையின் பாதையில்

அ.பாலசுப்ரமணியன்
ஈரோடு

எப்படி, சித்த மருந்துவத்தில் இலை தழைகளைத் தகுந்த அளவில் நேர்ந்தெடுத்து அவற்றைச் சாறாக்கியோ அல்லது பசையாக்கியோ உபயோகப் படுத்துவோமோ அதேபோல் இயற்கை விவசாயத்திலும் சில இலை தழைகள் மற்றும் மோர், கள், தேங்காய்ப்பால் போன்ற பொருட்கள் பயன்பட்டு, அவற்றின் மூலம் வேறுவேறு வகையான சத்துக் கரைசல்கள், பயிர்வளர்ச்சி ஊக்கிகள், நிலவள ஊக்கிகள் மற்றும் பூச்சி விரட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இன்றைய மாசுபடுத்தப்பட்ட காற்றில் மேலும் காற்றை மாசுபடுத்துவன யாவை என்று பார்க்கும் பொழுது முதல் நிலையில் நிற்பது, தெளிப்பான்களால் வயல்வெளிகளில் அடிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கெல்லிகளின் ஆதிக்கம்தான்.

### காய்கறிகளில் நஞ்சு

பொதுவாக எல்லாக் காய் கறிகளையும் உற்பத்தி செய்யும்பொழுது, இரசாயண மருந்துகள் என்பவை புழக்கத்தில் இருந்து வருகின்றன. உதாரணமாக வெண்டை, கத்தரி போன்ற காய் கறிச்செடிகளை வளர்க்கும் பொழுது, துவக்கத்திலிருந்தே செடிகளை நோயினின்றும் பாதுகாக்க வகை வகையான மருந்துகளும், மேலும் பூ மற்றும் காய்ப்புப் பருவத்தில் அதற்கெனப்பட்ட பூச்சி பூஞ்சாள மருந்துகரும் ஒவ்வொகு வாரமும் தவறாமல் தண்ணீரில் கலந்து விசைத் தெளிப்பான்கள் மூலம் தெளிக்கப்படுகின்றன. காய்ப்புப் பருவத்தில் மட்டும் கத்தரிச் செடிக்கு காய்த்துளைப்பானைக் கட்டுப்படுத்த இரசாயன விஷங்களைன அடிக்கப்படும் மருந்துகளுக்கு அளவே இல்லை. வாரம் இரண்டுமுறை மருந்து அடிக்கப்படுகின்றது.

### விலை கொடுத்து விஷத்தை வாங்குகிறோம்

கீரைகளுக்கும் இலைகளில் ஒட்டைபோடும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தத் தனிப்பட்ட மருந்துகள் பயன்படுத்தப் படுகின்றன. அக்கீரைகளை நாம் வாங்கிச் சமைத்து உண்ணும்பொழுது, மருந்தின் வேகம், வேகும் பொழுது குறையலாமே தவிர அதன் அடிப்படைப் பொருட்கள் இருந்து கொண்டே இருந்து நமது உடல் நலத்திற்கு எதிர்ப்பாக விளங்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை. கத்தரி, வெண்டை போன்ற காய்களினுள் ஈர்க்கப்பட்ட அபரிமிதமான இரசாயண மருந்துகள், காய்கறிகளைக் கழுவுவதால் மட்டும் போய்விடுவதில்லை. மேலும், புடல் பீர்க்கன் போன்று எல்லாக் காய்கறிகளுக்கும் செடிகளில் அடியுரம் அல்லது மேலுரமாகப் பயன்படுத்தப்படும் யூரியா, அம்மோனியம் நைட்ரைட் போன்றவைகளும், மனித சுகாதாரத்தையும் உடல்நலத்தையும் கெடுப்பவைகளே.

### தரமான உணவுப் பொருட்கள் உற்பத்தி

இனிமேல் தரமான அரிசி, காய்கறிகள் வேண்டுமென்றால் முதன்முலில் நிலத்திற்கு சாணம் மற்றும் கொழிஞ்சி, சணப்பு தக்கைப்பூண்டு போன்றவைகளைப் பரியிட்டு நறுக்கப்பட்டு மண்ணில் புதைபட்டு இற்றுப்போனமட்கின உரங்கள் உருவாக்கப்பட்டு நிலத்திலிடப்பட்டு நன்கு காற்றோட்டத்திற்கு உழவு செய்யப்படவேண்டும். பொதுபொதுப்பான நிலத்தில் பாய்ச்சப்படும் தண்ணீர் கீழே அடிவரைசென்று வேருக்கு நல்ல இயற்கை உரத்தை வேர்கள் உறிஞ்ச வழி வகுக்கும். அங்கே செழிப்பாக நுண்ணுயிர்களும், மண்புழுக்களும் வளரும்.

“

அந்த நிலத்தில் நாட்டுக்காய்கறி இரகங்கள் மற்றும் பாரம்பரிய நெல்வகைகளைப் பயிரிட்டு நெல்மணிகளைப் பெற்றுக்கைக்குத்தல் அரிசி வருவாக்கினால் நன்று. விதை போல வரகு, சாமை, திணை, கம்பு இராகி போன்றவற்றையும் பயிரிட்டு நல்ல தானிய வகைகளை மண் வளத்திற் கேற்ப, பயலுடன் உற்பத்தி செய்யலாம் நல்ல விளைச்சலுக்குச் சில ஊக்கிகளை நாம் இயற்கை தந்த பொருட்களிலிருந்து தயார் செய்யலாம். மண்ணில் தாண்ணீரோடு கலந்து விடலாம் அல்லது தெளித்தும் பயன்பெறலாம்.



***பஞ்சகவ்யா கலுவை (சர்வ ஊக்கி)***

இது பயிர்களுக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்களைத் தருகிறது. மேற்கொண்டு வளர்ச்சி ஊக்கியாகவும் மற்றும் நுண்ணூட்டத்தை அவர்கருக்கு அள்ளிக்கொடுக்கிறது. விதைகளைச் நேர்த்தி செய்யவும் குறிப்பிட்ட அளவில் பயன்படுத் தப்படுகிறது. முளைப்புத்திறனையும்,வேர் நோய்க் கட்டுப்பாட்டையும் தந்து பயனளிக்கிறது. ஒரு லிட்டர் தண்ணீரில் முப்பது மில்லி லிட்டர் பஞ்சகவ்யாவைப் பயிர்களுக்குப் பதினைந்து நாட்களுக்கு ஒருதடவை தெளிக்கலாம். கரைசலை வடிகட்டிப் பயன்படுத்த வேண்டும். இயற்கைப் பொருட்களாம் பசுஞ்சாணம், பசுமாட்டுச் சிறுநீர், காய்ச்சி ஆறியபால், பசுமாட்டுத் தயிர், பசுநெய், நாட்டுச்சர்க்கரை, இளநீர், கனிந்த வாழைப் பழங்கள் தென்னங்கள் போன்றவற்றை அளவு, முறைப்படி கலந்தும் நாள்பட நிறுத்திக் கலந்தும் தயாரிக்கப் படுகின்றது.

***அரப்பு மோர்க் கரைசல் (வளர்ச்சி மற்றும் பூ ஊக்கி)***

அரப்பு மோர்க் கரைசல் தயாரிக்க, அரப்பு இலை அல்லது உசிலை மர இலைகள் உகிலோ எடுத்து நன்றாக நீருடன் சேர்த்து அரைக்க வேண்டும். இதில் ஐந்து லிட்டர் கரைசல எடுத்துப் புளித்த மோருடன் சேர்க்க வேண்டும். இந்தக் கரைசலை மண் பானையில் ஒருவாரம் புளிக்கவைத்து ஒரு லிட்டருக்குப் பத்துலிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கலாம்.அரப்பு மோர்க் கரைசல் தெளித்தால் பூச்சிகள் ஓடிவிடும். பூப்பிடிக்கும் பருவத்தில் தெளிப்பதால் பயிர் வளர்ச்சி அதிகமாகி நிறையப் பூக்கள் பூக்கும், நல்ல விளைச்சல் கிடைக்கும்.

***அமுதக் கரைசல் முண்ணுயிர் ஊக்கி***

இதை நிலவள ஊக்கி என்றும் சொல்வார்கள். ஒருதடவை போட்ட மாட்டு சாணம் மற்றும் சிறுநீரை பிளாஸ்டிக் வாளியில் எடுத்து ஒரு கைப்பிடி வெல்லம் சேர்த்து ஒரு குடம் தண்ணீர் சேர்த்து, ஒருநாள் முழுதும் நிழற் பாங்கான இடத்தில் வைக்கவேண்டும். இத்துடன் பத்துப் பங்கு தண்ணீர் சேர்த்துத் தெளிக்கலாம். பாசன நீரிலும் கலந்து விடலாம். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கலாம் அல்லது தண்ணீரில் கலந்து வீடலாம். நுண்ணுயிர் ஒரே நாளில் பெருகும். நோய்த்தாக்குதல் இல்லாமல் பயிர்கள் வளர உதவும்.

***தேமோர்க் கரைசல்***
***(வளர்ச்சி ஊக்கி மற்றும் பூச்சிவிரட்டி)***

தேங்காய்ப் பாலும் மோரும் கலந்த கலவையே தேமோர்க் கரைசல். நன்கு புளித்த ஐந்து விட்டர் மோரில், பத்துத்தேங்காய் எடுத்துத் துருவி எடுத்துக்கொண்டதை ஆட்டி ஐந்து லிட்டர் பால் எடுத்துக் கலக்கி இந்தக் கலவையை மண்பானையில் ஏழு நாள் ஊறவைக்கவும். மெல்லியதுணியால் முடிவைக்கவும். ஏழுநாட்களில் புணித்த தேமோர்க்காரசல் கிடைக்கும். ஒரு லிட்டர் தேமோர்க் கரைசலுக்கு பத்து லிட்டர் தண்ணீர் கலந்து பயிர் கருக்குத்தெளிக்கலாம். ஒருஏக்கருக்கு பத்து டேங்க் போதும். இந்தக் கரைசல் சைட்டோசைம்' என்ற வளர்ச்சி ஊக்கிக்கு இணையானது.

**எனது அறிவுரை**

இனிய தரம்பார்த்து இயற்கை அருளாற்றும்
கனிவிட் டேன்நாம் கசப்பிற் செல வேண்டும்?
தனித்துப் பயிரிட்டுத் தரமான காய்கறிகள்
நினைத்து விவசாயம் நிற்பதே சிறப்பு
வாழ்க இயற்கை விவசாயம்; வளர்ப்போம்!

■

# மகிழ்வித்து மகிழுங்கள்..!

காகிதங்கள் தீர்மானிக்க கூடாது
ஏழை எளியோரின் கல்வியை,
மாணவர்களின் கல்வி நலனிலும்,
மாண்புமிகு தமிழ் மொழியின்
மொழி நலனிலும் எப்போதும் பயணிப்போம்..!
எல்லோர்க்கும் துணை நிற்போம்...!!

பிறர் மகிழப் பிறக்கும்
புன்னகையே
"மீப்பெரும் அறம்"..

பிறரை மகிழ்வித்து மகிழ்வதில்
இருக்கிறது,
மகிழ்ச்சி,,
மகிழ்ச்சியாய் வாழ்வோம்...!



<u>பெருமகிழ்வுடன்...!</u>

**சிலம்பொலி செல்லப்பன்
சிலப்பதிகார அறக்கட்டளை,
சென்னை.**